# காம மறுதலிப்பு : இந்துசமய இலக்கியங்களை மையப்படுத்திய ஆய்வு

ந.சுபராஜ்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
இந்து நாகரிகம்,
மொழித்துறை,
இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகம்.

ப.தாரணி
இந்துநாகரிகம்,
மொழித்துறை,
இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகம்.

## அறிமுகம்

இந்துசமயம் பண்டைய காலத்தில் இருந்துஇன்று வரை செல்வாக்கு பெற்ற சமயமாக காணப்படுகிறது. ஆதி அந்தமில்லா இந்து சமயத்திற்கு "சனாதன தர்மம்" என்ற பெயரும் உண்டு. அதன் பொருள் 'என்றுமுள்ள வாழ்க்கை நெறி' என்பதாகும். இந்து மதம் பல்வேறு வகையிலும் மனிதர்கள் பின்பற்ற வேண்டிய தர்மங்கள் பற்றி எடுத்துக்கூறியுள்ளது. தனி மனித தர்மம் அல்லது வியக்தி தர்மம் என்பது ஒரு தனி மனிதன் அன்றாடம்கடைப்பிடிக்க வேண்டிய தர்மமாகும்.வேதாந்த சாத்திரங்கள் கூறும் இல்லற தர்மம்,சமூக தர்மம், இராஷ்டிர தர்மம், மானவ தர்மம் ஆகிய தர்மங்களில் தனி மனிதன்கடைபிடிக்க வேண்டிய வியக்தி தர்மங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. இந்து சமயம் பஞ்சமா பாதகங்களான கொலை, களவு, கள், காமம், குருநிந்தை ஆகியவற்றில் ஒன்றான காமத்தை இந்து ஒழுக்க நெறிக்கு புறம்பாக குறித்து நிற்கின்றது.காமம்என்பது ஆசை,விருப்பம், புலன் சார்ந்த இன்பம், காதல் மற்றும் வாழ்க்கையின்பிற இன்பங்களையும் பொதுவாக குறிக்கக்கூடியசொல்லாகும்.

திறவுச் சொற்கள்: காமம், இந்து சமயம், மறுதலிப்பு, இந்து இலக்கியங்கள்

## ஆய்வுப்பிரச்சினை

ஆன்மீகம், பக்தி தொடர்பான கருத்துக்களை எடுத்துக்கூறும் இந்து இலக்கியங்களில் அகத்திணை மரபான காம மறுதலிப்பு விடயங்களும் எடுத்துரைக்கப்படுகின்றனவா என்பது இவ்வாய்வின் விரச்சினையாக கருதப்படுகிறது.

## ஆய்வின் நோக்கங்கள்

பிரதான நோக்கம் - இந்து இலக்கியங்களில் காம மறுதலிப்பு பற்றிய விடயங்களை எடுத்துரைத்தல்.

துணை நோக்கம் - காம மறுதலிப்பு பற்றி கூறும் இலக்கியங்களை அடையாளப்படுத்தல்.


© 2025, IRJTSR

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்பியல்சார் பகுப்பாய்வாக அமையவுள்ளது. முதல்நிலைத்தரவுகளாக இந்துசமய இலக்கியங்கள் இரண்டாம் நிலைத்தரவுகளாக காமம் மற்றும் காம மறுதலிப்பு தொடர்பாக வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகள், பத்திரிகை குறிப்புக்கள், இணையத்தளம் மற்றும் சஞ்சிகை குறிப்புகள் பயன்படுத்தப்பட உள்ளன.

## கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

இந்துசமய தத்துவத்தில் காமம் என்பதுபுருடார்த்தங்கள்நான்கில் ஒன்றாகும். அதாவது அறம், பொருள், இன்பம் (காமம்), வீடு என்பவையே புருடார்த்தங்களாகும். தனிமனிதன் வாழ்க்கையில்அடைய வேண்டிய குறிக்கோள்களுள் ஒன்றாக காமம்கருதப்படுகிறது. எனினும், அறம் மற்றும் பொருளுக்கு பின்பேகாமம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. அறம்,பொருள், காமம் ஆகிய மூன்றையும் வாழ்க்கையில் முறையாககடைபிடித்தால் வீடுபேறு கிடைக்கும் என சைவ, வைணவமதங்களில் நம்பப்படுகிறது. சைவ சமயத்தில் காமத்தின்அதிபதியாக காம தேவன் கருதப்படுகிறார்.

இந்து சமயத்தின் அறக்கருத்தானது ஒருவனுக்கு ஒருத்தி என்பதேயாகும். இதை விடுத்து காமத்தையும் முறைகேடான விதத்திலும் அதர்ம வழியிலும் நிகழ்த்துவதை இந்து மதம் மறுதலிக்கவே செய்கின்றது. அதுமட்டுமன்றி காமத்தை அடக்கியாள்வதன் மூலமாக தவ வாழ்வில் யோக நிலையை அடைய முடியுமென்பதையும் கூறுகின்றது. இந்து சமயமானது முக்கியமாக ஐந்து செயல்களை பாவச்செயல்களாக வலியுறுத்தி நிற்கின்றது. இதுவே பஞ்சமாபாதகங்களாகும். அவை : கொலை, களவு, பொய், காமம், கள்ளுண்ணல் என்பனவாகும். இவ்வாறான ஐந்து செயல்களை தொடர்ந்தும் ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாட்களில் செய்து வருவானாக இருந்தால் வாழ்க்கையில் தோல்வி, துக்கம், மன அமைதி இன்மை போன்ற பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுமென அறுதியிட்டுக் கூறப்படுகின்றது.

## வட இந்திய வரலாற்றுக்கால இந்து இலக்கியங்களில் காம மறுதலிப்பு

**வேத இலக்கியங்கள்** - வேத இலக்கியமானது காம மறுதலிப்பினை எண் வகை திருமணங்களின் ஊடாக புலப்படுத்துகின்றது. வேத இலக்கியம் பிரம்மம்,தெய்வீகம்,காந்தர்வம், ஆரிடம், பிரஜாபத்யம்,ஆசுரம்,ராட்சசம்,பைசாசம் ஆகிய எண் வகை திருமணங்கள் பற்றி குறிப்பிட்டிருக்கின்றது. இவற்றில் **ராட்சச/ராக்கத திருமணம்** என்பது பெண்ணை அவளின் விருப்பமின்றி வலுக்கட்டாயமாக திருமணம் செய்தல் ஆகும். இங்கு கடத்திச் சென்று திருமணம் செய்யும் பெண்ணுக்கு எப்படி திருமணத்தில் விருப்பம் இல்லையோ அதுபோலவே திருமணத்தினால் கூடும் காமத்திலும் விருப்பம் இல்லை என்பது வெளிப்பட்டு நிற்கின்றது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR 

இதற்கு சிறந்த உதாரணமாக : விமாதா என்பவன் பொருமித்ரா என்பவரின் மகளை கட்டாயத்தின் பேரில் தூக்கிச் சென்று ராட்சத திருமணம் செய்ததாக ரிக்வேத இலக்கியம் குறிப்பிடுகின்றது. **"வேதோ அகிலோ தர்மமூலம்"** எனவேத இலக்கியங்களே தர்மத்திற்கு அடிப்படை என்ற வகையில் ஒழுக்க நெறிக்கும் முரணான காமத்தை மறுதலித்துள்ளதைக் காணலாம்.

**உபநிடதங்கள் -** ஒரு மனிதனின் வாழ்க்கை படிநிலையாக பிரம்மச்சரியம், கிருகஸ்தம்,வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகியன காணப்படுகின்றன.இவற்றில் நான்காவது படி நிலையான வாழ்வின் முக்கியமான கட்டத்தில் அவன் இல்லறத்தில் பெற்ற சுகபோகங்களை துறக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய சுகபோகங்களில் ஒன்றாக கணவன் மனைவிக்கு இடையே இடம்பெறும் காமமும் காணப்படுகின்றது. இங்கு பொருத்தமான காமமே (முறையான) துறக்கப்பட அல்லது மறுதலிக்க வேண்டிய ஒன்று என்பதை இவ் சன்னியாச உபநிடதங்கள் விளக்கி இருக்கின்றது.

இதற்கு எடுத்துக்காட்டாக: சத்யாயனிய உபநிடதம்:வைணவ மரபில் துறவற நிலையை குறிப்பிடுகின்றது. **பிரம்ம உபநிடதம், சுதாசுருதி உபநிடதம், பரமஹம்ச உபநிடதம்** போன்றவற்றை குறிப்பிடலாம்.**இதிகாசஇலக்கியங்களில் காமமறுதலிப்பு:** வடமொழியில் தோற்றம் பெற்ற இந்து இலக்கியங்களே இதிகாசங்கள் ஆகும். அவற்றில் இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம் என்பன அடங்கும்.இத்தகைய இலக்கியங்களில் கதாபாத்திரங்களின் வாயிலாக காமம் எங்கனம் மறுக்கப்பட்டுள்ளது என்பதனை காணலாம்.

**இராமாயணம் -**இந்துக்களின் தர்ம நெறிக்கும், மானிட விழுமியங்களுக்கும் அடிப்படையாக அமைவது இராமாயண இலக்கியம் ஆகும்.இராமாயணக்கதை எழுதபட்டதன் நோக்கமே பெண்ணாசை மோகத்தால் இராச்சியம் சரிந்தது மட்டுமல்லாது உயிரும் மாய்க்கப்பட்டமையை எடுத்துக்கூறுவதற்காகும். இதில் காமத்தின் செயலால் இராவணன் சீதையை கவர்ந்து (ஆரண்ய காண்டம்) வந்ததமையால் இராம - இராவணப் போர் (யுத்த காண்டம்) ஏற்படலாயிற்று. இதன் விளைவாக இராவணனது உயிரானது இராமனால் கொய்யப்பட்டது. எனவே இக்கதையிலிருந்து காம மோகத்தால் பிறர் மனைவியை நயவாது ஒழுக்கத்துடன் ஒருவனுக்கு ஒருத்தி எனும் அறத்தை கைவிடாது வாழ்தல் பற்றிய கொள்கையை இந்து மதம் வலியுறுத்துகின்றது.

இராமாயணத்தில்மற்றுமொரு நிகழ்வாக வாலியின் கதை இடம்பெறுகின்றது. தனது சொந்த சகோதரனின் (சுக்கிரீவன்) மனைவி மீது ஆசை கொண்டு அவளை அடைய முற்படுகின்றான். இப்படியான காம மோகக் குணங்களினால் இறுதியில் இராமனின் கரங்களினால் இறக்கின்றான். இராமன் தன்னை மோகத்தால் அடைய நினைத்த சூர்ப்பனகையின் காமத்தையும், காதலையும் வெறுத்து ஒதுக்கியமை மற்றும் இலக்குமணனும் அவளது காமத்திற்கு இடம் கொடுக்காமல் அவளது மூக்கையும்,



© 2025, IRJTSR

காதுகளையும் வெட்டி எறிந்தமை. எனும் கதை மூலம் ஆண்களால் காமம் மறுதலிக்கப்பட்டுள்ளமையினை இராமாயணத்தில் காணலாம்.

**மகாபாரதம்** - இந்து சமயத்தின் சிற்பக்களஞ்சியமாக மகாபாரதம் காணப்படுகின்றது.பீஷ்மர் வாழ்நாட்களில் தன்னுடைய கற்பை இழக்காத ஓர் ஆண்மகனாக வாழ்ந்த ஒரு மாமனிதராக பாரதக்கதையில் சித்திரிக்கப்படுகின்றார். இக்கதாப்பாத்திரத்தின் வாயிலாக இல்லறத்திலிருந்து துறவறம் சென்றால் மட்டுமல்ல நேரடித் துறவறத்திலும் வீடுபேற்றினை அடைய முடியுமென்பதை கூறிச்சென்றுள்ளார். அதாவது மகாபாரத கதாபாத்திரமான பீஷ்மர் தன் மீது மோகம் கொண்டு தன்னை திருமணம் செய்யும்படி கூறிய சிகண்டி எனும் பெண்ணின் ஆசையை நிராகரித்தமையிலிருந்து மகாபாரத இலக்கியத்திலும் ஆண்களால் காமம் மறுக்கப்பட்டுள்ளமை வெளிப்படையாக கூறப்பட்டுள்ளது.

**பகவத் கீதை**- இந்து சமயத்தின் புனித நூல் பகவத் கீதை ஆகும். பதினெட்டு வித குணங்களில் நல்லவற்றைப் பின்பற்றியும், தீயவற்றைக் களைந்தும் வாழ்க்கைப்படியில் ஏறிச் சென்றால்தான் இறைவன் அருள் நமக்குக் கிடைக்கும் என்பதின் அடிப்படையில் கீதை பதினெட்டு அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவ்பதினெட்டு குணங்களில் ஒன்றாக**காமம்** காணப்படுகிறது. பற்று உண்டானால் பாசம், மோகம் ஏற்பட்டு புத்தி நாசமடைந்து அழிவு ஏற்படுகிறது என்று கீதையானது உபதேசிக்கின்றது.

பகவத்கீதை நரகத்தின் மூன்று கதவுகள் என்பது காமம், கோபம்,பேராசை என தெளிவாக குறிப்பிடுகின்றது. காமம் மனிதனை எல்லா கெட்ட செயல்களுக்கும் தூண்டும் மூல காரணமாகும்.என்ற காமம் தொடர்பான பாதகமான கருத்துக்களை கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறுவதன் மூலம் காமம் மறுதலிக்கப்பட்டுள்ளமைபுலப்படுகின்றது. இதனை சான்றுபடுத்தும் வகையில் ‘‘காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண ஸமுத்பவ மஹாசநோ மஹா பாப்மா வித்த்யேந – மிஹ வைரிணம்’’கீதையின் ஸ்லோகம் அமைகின்றது.

**புராண இலக்கியங்கள்** - இந்து சமய வரலாற்றில் வேதங்களில் உள்ள கருத்துக்களை தெளிவாக கூறுவது புராணங்களே ஆகும்.**கருடபுராணம்** பாவச் செயலான பொருந்தாக்காமத்தினை கொள்ளக்கூடாது என்கின்றது. காம வெறியர்கள் அடையும் தண்டனைகளை குறிப்பிடுவதன் மூலம் கருட புராணத்தில் காமம் மறுதலிக்கப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது. எடுத்துக்காட்டாகவஜ்ரகண்கடம் என்பது சேரக்கூடாத ஆணையோ, பெண்ணையோ கூடி தழுவி மகிழும் காமவெறியர்கள் தண்டனையாக நெருப்பால் செய்யப்பட்ட பதுமைகளை கட்டித் தழுவ நிர்பந்திக்கப்படுவார்கள் என குறிப்பிடுகின்றது.லாலாபக்ஷம் என்பதுமனைவியை கொடுமைப்படுத்தி முறையற்ற காம இச்சைக்கு ஆளாக்கி கெடுத்தல் எனும் பாவத்திற்கு உரிய தண்டனையாக அவ்வாறு செய்யும்பாவிகளும் அதே முறையில் வதைக்கப்படுவார்கள் என்கின்றது.

பூபோதம் என்பது வெட்கம் இன்றி இழிவான பெண்களுடன் காமவெறியில் ஈடுபடுதல் ஆகும்.இப்பாவத்திற்குரிய தண்டனையாக பாவிகளை விடமுடைய பூச்சிகள்,பிராணிகள்

கடிக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.சான்மலி என்பதுஉறவினர்களின் முறையை கருதாது அவர்களுடன் காமவெறியில் எப்படியாவது கூடி மகிழ்தல் ஆகும்.இச் செயலுக்குரிய தண்டனையாக பாவிகள் முள்ளாலான தடிகளாலும், முற்செடிகளாலும் வற்புறுத்தப்படுவார்கள் என குறிப்பிடுகின்றது. தாமிஸிர நரகம் என்பது பிறர் மனைவியுடன் காமத்தில் ஈடுபட்டால் நரகத்தில் எமகிங்கரர்கள் முள்ளாலான கட்டைகளால் அடித்து துன்புறுத்துவார்கள். போன்ற உதாரணங்களை குறிப்பிடலாம். ஆகவே புராணங்கள் முறையற்ற காமத்தினால் ஏற்படும் விளைவுகளைச் சுட்டிக்காட்டி காமத்தினை மறுதலிக்கின்றது.

**தர்மசாஸ்திரங்கள் -** இந்து சமய நெறிகளை வரையறைப்படுத்தி இந்து மத கோட்பாடுகளோடு இணைத்து கூறுபவை தர்மசாஸ்திரங்கள் ஆகும். தர்மசாஸ்திரம் ஆனது காமத்தினை தூண்டும் விடயங்களை வெளிப்படையாகவே மறுதலித்து உள்ளது.ஆடை இல்லாதவர்களை பார்க்கக்கூடாது, காலை மாலை வேளையில் உடலுறவு கொள்ளக்கூடாது, மாதவிடாய் உள்ள பெண்ணுடன் நேருக்கு நேர் நின்று உணர்ச்சி வரும் வகையில் பேசக்கூடாது, பிறரது மனைவியுடன் நட்புறவு கொள்ளக்கூடாது போன்றவற்றை குறிப்பிடலாம்.

மனு தனது மனுதர்ம சாஸ்திரத்தில் முறையற்ற காமம் செய்யும் போது அவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடுவதில் இருந்து காமம் மறுதலிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியலாம்.எடுத்துக்காட்டாக ஒரு சூத்திரன் மேல் வண்ணத்தில் உள்ளவர்களின் மனைவியை தனது வலிமையால் காம வேட்கையில் கூடினால் உயிர் போகும் வரை அவரைதண்டிக்க வேண்டும்,அதே சத்திரியனாக இருந்தால் கழுதை மூத்திரம் கொடுத்து மொட்டை அடித்தல் வேண்டும்என்ற செய்திகளை குறிப்பிடுகின்றது.இவ்வாறாக தர்மசாஸ்திரங்கள் தர்மத்திற்கு புறம்பான முறையற்ற காமத்தினை மறுக்கும் வகையில் பல கருத்துக்களை முன் வைத்திருக்கின்றது.

**அர்த்த சாஸ்திரம்:** இந்து இலக்கியமான அர்த்தசாஸ்திரம் காமத்தை விட கொடிய நோய் இல்லை என்றும் ‘‘பிறவிக் குருடனுக்கு கண் தெரிவதில்லை அதுபோல காமம் உள்ளவனுக்கு கண் தெரியாது’’என காமம் உள்ளவனை குருடனுக்கு ஒப்பிட்டு காமத்தின் இழி நிலையை கூறுவதன் மூலம் இந்த இலக்கியம் காமத்தை மறுதலித்துள்ளது என்பது புலனாகின்றது.

## தென்னிந்திய வரலாற்றுக் கால இந்து இலக்கியங்களில் காம மறுதலிப்பு

**திருமுருகாற்றுப்படை:** இந்து சமயத்தின் ஒரு பிரிவான கௌமாரத்தின் அதிபதியான முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நக்கீரரால் பாடப்பட்ட இலக்கியமே இதுவாகும். நக்கீரர் இவ்விலக்கியத்தில்காமத்தினை நன்மையுடையது என எண்ணுவது அறிவில்லாதவரிடத்துசென்று தங்குகின்ற பெரிய அறிவில்லாமையை உடையது என்றுகாமத்தின் இழிவினை குறிப்பிடுகின்றார். இதனை



© 2025, IRJTSR 

‘‘காமம் யாவதும்நன்று எனஉணரார் மாட்டும்

சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்தே**…”** இப்பாடல் வரி சான்றுபடுத்துகின்றது.

**தேவாரங்கள்**: தேவார இலக்கியங்களில் சம்பந்தரின் தேவாரமானது காமத்திற்கு கடவுளான காமனை எரித்த கதை மூலம் இறைவனாலே காமம் மறுக்கப்பட்ட விடயத்தை கூறி நிற்கின்றது. எவ்வாறு என்றால் காமத்தின் அதிபதியாகிய காமன் கைலாய மலைக்குச் சென்று தவத்தில் இருக்கும் சிவனுக்கு காமம் தோன்ற வேண்டும் என்று மலரக் கணைகளை வீசினான். அப்போது இயல்பு நிலைக்கு வந்த சிவன் யோக நிலையில் இருந்து மோக நிலைக்கு என்னை இட்டு சென்றவன் யார் என்று கோபம் கொண்டு ஒளிந்திருந்த மன்மதனை தன் நெற்றிக்கண்ணால் காமதகனம் செய்தார். ஆகவே சைவத்தின் பரம்பொருளான கடவுளே காமத்தினை மறுதலித்தவரலாறு இந்து சமயத்தில் காணப்படுகின்றது.

இவ் வரலாற்றுக் கதையை சம்பந்தரது கருப்பறியலூர் பதிகத்தின் ‘‘…கண்ணிறந்த விழியின் அழலால் வருகாமன் உயிர் நீட்டி…’’எனவரும் தேவாரப்பாடல் சான்றுபடுத்துகின்றது. காமம் உயர் நெறியிலான தவத்தை கலைக்கும் அளவுக்கு கொடியதுஆகவே அது மறுதலிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதனை இத்தேவாரப்பதிகம் புலப்படுத்துகின்றது.நாவுக்கரசர் ‘‘காமத்துள் அழுர திநின்று கண்டாரால் ஒப்புன்னாதே…’’ என தனது தேவாரத்தில் இறைவழிபாட்டுக்கும், இறைவனை அடைவதற்கும் காமம் கொள்ளுதல் என்பது தடையாக உள்ளது என்பதனை குறிப்பிட்டு இதன் மூலம் சமுதாய உறுப்பினர்கள் பொருந்தாக்காமத்தை செய்யக்கூடாது என காமத்தை மறுதலித்து கூறுகின்றார்.

பிறவி என்ற பெரிய கடலில் நம் வாழ்க்கைப் படகு செல்லும் போது, காமம் என்ற பெரிய பாறையில் அந்த படகு முட்டி தலை கீழாக கவிழ்ந்து விடுகிறது. அந்த சமயத்தில், நடு கடலில், இருட்டில், எலும்பு உறையும் குளிர்ந்த நீரில், உடைந்த படகோடு தத்தளிக்கும் போது, இறைவா, உன்னை நினைக்கும் உணர்வைத் தருவாய் என்று சுந்தரர் தனது தேவாரத்தில் காம மறுதலிப்பை சுட்டிக்காட்டியுள்ளார். இதனை,

‘‘மனமெனும் தோணி பற்றி மதியெனுங் கோலை ஊன்றிச்

சினமெனும் சரக்கை யேற்றிச் செறிகட லோடும் போது…’’எனும் தேவாரம் சான்றுபகர்கின்றது.

**திருமந்திரம்** -திருமந்திரம் திருமூலரால் எழுதப்பட்ட சைவ சமய இலக்கியம் ஆகும்.காமத்தினால் ஏற்படும் இழிவு பற்றி திருமூலர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.திருமூலர் கணவர் வீட்டில் இல்லற நெறியில் வாழும் பெண்ணின் மேல் காமம் கொண்டு அணுகினால் சுழல் நீர் தன்னோடு இழுத்துச் செல்வது போல நம்மையும் அந்த காமம் இழிவில் இழுத்துச் செல்லும் என்றும்,ஒரு பெண்ணானவள் ஒரு ஆடவனிடம் பணம் தீர்ந்து

விட்டால் பணமுள்ள ஆடவனை நாடுவாள் ஆகவே அவர் மேல் காமம் கொள்வது நாமே நமக்கு வைக்கும் கசப்பு என்றும் காமத்தினால் ஏற்படும் இழிவு நிலையை கூறுவதன் மூலம் காமத்தினை மறுதலிப்பினைக் காணலாம். இதனை முறையே,‘‘மனைவி புகுவார்கள் மனைவியை நாடிபுகு நீர் போல…’’‘‘வையகத் கேமடவாரோடும் கூடிஎன் மெய்யகத் தோரும்…’’எனவரும் திருமந்திரப் பாடல்கள் சான்று பகிர்கின்றது.

காம மறுப்பினால் ஏற்படும் நன்மை பற்றியும் திருமூலர் குறிப்பிடுகிறார்.ஒரு பெண்ணை காமத்தினால் கூடுவது கெடுதல் என்பதனை அறியாமல் அதிலே மூழ்கிக் கிடக்கும் மூடர்களுக்கு சரியான பாதையை காட்டி வழி நடத்துவது அறிவுள்ளவர்களின் கடமையாகும்.அப்படி செய்தால் மூடர்கள் பல நன்மைகளைப் பெறுவார்கள்.அதாவது காமத்தினை மறுப்பதால் ஏற்படும் நன்மைகளை கூறுவதன் மூலம் திருமந்திரம் காமத்தை மறுதலிக்கின்றது என்பது புலனாகின்றது. இதனை ‘‘ஒழுக்கம் குளமூடு பாசியில்…’’(208) திருமந்திர பாடல் சான்று பகிர்கின்றது.

காமக்கட்டுப்பாடு பற்றி நோக்குமிடத்துகாமமானது தேய்பிறை நாட்களிலேயே அதிகமாக உண்டாகும். அப்போது உடலிலே அதிகளவான விந்துவானது வெளியேறும் தன்மையானது உடலிலே இயல்பாக ஏற்படும்.அவ்வாறு வராமல் இருக்க திருமூலர் திருமந்திரத்தில் விந்து ஜெயம் என்ற ஒரு பகுதியை இங்கே கூறுகின்றார். ஆகவே திருமூலர் கூறிய காமக்கட்டுப்பாடு பற்றிய விடயங்களில் இருந்து காமத்தை மறுதலிக்க மந்திரங்களே தோற்றம் பெறும் அளவுக்கு காமம் மறுதலிக்கப்பட்டுள்ளது என்ற கருத்து எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதனை ‘‘ஆமுயிர்உயிர் தேய்மதி நாளே எனில் விந்து போம் வழி எங்கெனும் போகாது…’’எனும் திருமந்திரப் பாடல் சான்று பகிர்கின்றது.

எட்டிப்பழம்அழகாய் இருக்கும் சாப்பிட்டால் விஷம் ஆகும். அது போல் பெண்களின் மீது வரும் காமம் விஷமாகும் அத்தகைய பெண்களின் மீது வரும் காமத்தை கொடியது என்றும் விஷம் என்றும் கோபத்துடன் திட்டி முறைதவறி செல்லாமல் வைத்திருங்கள் என காமக்கட்டுப்பாட்டை திருமூலர் ‘‘இலைநல வாயினும் எட்டி பழுத்தால்…’’எனும் பாடலின் ஊடாக விளக்குகின்றார்.ஆகவேதிருமந்திரமானது காமம்மறுப்பினால்ஏற்படும் நன்மை,காமக்கட்டுப்பாடு,காமத்தினால் ஏற்படும் இழிவு போன்ற தலைப்புகளின் ஊடாக காமத்தினை மறுதலித்துள்ளது என்பது புலனாகின்றது.

**திருக்குறள்** :ஆசையே அனைத்துத் துன்பங்களிற்கும் மூலகாரணமாகும் என்று உலகப் பொதுமறையினை இயற்றிய பொய்யாமொழிப்புலவர் குறிப்பிடுகின்றார்.

‘‘ஆசையே அவா எனப் எல்லா உயிர்க்கும்
எஞ்ஞான்றும் தவாஅப் பிறப்பீனும் வித்து’’ (திருக்குறள்-361)
‘‘தூய்மை என்பது அவாவின்மை மற்றது
வாய்மை வேண்ட வரும்’’ (திருக்குறள்-364)


© 2025, IRJTSR

“அவாவின் ஆற்ற அறுப்பின் தவாவினை
தான் வேண்டு மாற்றான் வரும்” (திருக்குறள்-367)

வள்ளுவஆசான்“அவா அறுத்தல்”என்னும் அதிகாரத்தைத் துறவற இயலில் வைத்துள்ளார். அதாவது, ஆன்ம ஈடேற்றம் வேண்டி நிற்கும் ஒருவரிடம் காமமானது வருமாக இருந்தால் துன்பத்தால் உழன்று கொண்டிருக்கும் நிலை மாத்திரமே வரும். எனவே, துறுவறத்தில் காமமானது எதிர்க்கப்படுமாற்றை கவனிக்கக்கூடியதாக உள்ளது.

**திருவாய்மொழி :**“அற்றது பற்றெனில் உற்றது வீடு உயிர்

செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே”(வீடுமின்-1.2.5)

என்பது நம்மாழ்வாரின் திருமொழி. அதாவது உலகப் பொருட்களிலுள்ள பற்று நீங்கினால் தான் மோட்சமானது சம்பவிக்கும் எனக்கூறப்படுகின்றது. பற்று எனுமிடத்து காமம் என்பதும் உள்ளடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**சைவ சித்தாந்தம் :** சைவ சித்தாந்தத்தின் படி உயிரானது உடலினைப் பெறும் முன்பு அறிவு, இச்சை (காமம்), செயல் என்பது இன்றி அறியாமை நிலையில் மூழ்கியிருக்கும். இந்த உயிரானது கடவுளைப் போன்று தோற்றமும் அழிவுமில்லாதாகும். இவ்வாறான ஆன்மாவானது சிற்றின்ப மோகத்தை விரும்பக் கூடியது. ஆனால் சிற்றின்பத்தை தடுத்து பேரின்பத்தையே நாட வேண்டுமென்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும்.சைவசித்தாந்தம் இவ்வுலக இன்பங்களை வெறுக்கச் சொல்லவில்லை. மாறாக இவ்வுலகை இறைவன் அருளாக எண்ணி பற்றற்ற மனத்துடன் அனுபவிக்கச் சொல்கிறது. அதாவது எல்லை மீறிய எதுவும் ஆபத்தையே விளைவிக்கும் என்பது சைவசித்தாந்தம் கூறும் கருத்தாகும்.

## முடிவுரை

இந்து சமயத்தின் அறக்கருத்தானது ஒருவனுக்கு ஒருத்தி என்பதேயாகும். இதை விடுத்து காமத்தையும் முறைகேடான விதத்திலும் அதர்ம வழியிலும் நிகழ்த்துவதை இந்து மதம் மறுதலிக்கவே செய்கின்றது. அதுமட்டுமன்றி காமத்தை அடக்கியாள்வதன் மூலமாக தவ வாழ்வில் யோக நிலையை அடைய முடியுமென்பதையும் கூறுகின்றது. வேதம், உபநிடம், இராமாயணம், மகாபாரதம் - பகவத்கீதை, திருமந்திரம், தர்ம சாஸ்திரம், சைவ சித்தாந்தம், திருவாய்மொழி, திருக்குறள், கருடபுராணம், தேவாரங்கள் போன்ற இந்து இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு காம மறுதலிப்பானது இருக்கின்றமையை அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது. இந்து இலக்கியங்கள் காம கட்டுப்பாடு, காமத்தினால் ஏற்படும் விளைவு, காமம் கொள்பவர்கள் அடையும் தண்டனை, காமம் மறுப்பினால் கிடைக்கும் நன்மை,முறையற்ற காமம் போன்ற விடயங்கள் ஊடாக காமத்தினை மறுதலித்துள்ள செய்தியை எடுத்துக்காட்டுகின்றமையைக் காணலாம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

## உசாத்துணைகள்

[1] கண்ணதாசன்.(1973).அர்த்தமுள்ள இந்துமதம்.வானதி பதிப்பகம்.

[2] சீனிவாசன்,பா.(2000).மனம் மலரட்டும்.விகடன் பிரசுரம்.

[3] தீனதயாளன்,பா.(2005).பரமஹம்சர் : பொழியும் கருணை மழை.கிழக்கு பதிப்பகம்.

[4] துர்க்காதாஸ்,எஸ்,கே.(1970).சிவமஹா புராணம்:இரண்டாவது பாகம்.பிரேமா பிரசுரம்.

[5] மாத்ருபூதேஸ்வரன்,எஸ்,எஸ்.(2005).பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணம்.நர்மதா பதிப்பகம்.

[6] ராமநாதன்,அரு.(1975).ஸ்ரீகந்தபுராணம் : இரண்டாம் பாகம்.பிரேமா பிரசுரம்.

[7] வசந்தா வைத்தியநாதன்.(2013).இந்து பௌத்த சமயங்களில் அறக்கோட்பாடு.(261-277).இரகுபரன்,க.,பிரசாந்தன்,ஸ்ரீ.(தொகு.).இந்து சமயமும் அத்வைத நெறிகளும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

[8] ஜெகாதா.(2003).கடவுளை காதலித்த கன்னியர்.ராம்பிரசாந்த் பப்ளிகேஷன்ஸ்.

[9] Subaraj,N. Kesavan.S. (2016). Conspiracy case in Hinduism - A Critical view. Research Gate.https://www.researchgate.net/publication/323541258_conspiracy_case_in_Hinduism_-_A_Critical_view

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2025, IRJTSR 